2025 – அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 113/2023*

*2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | PW1, மணிகண்டன் |
| தந்தையார் பெயர் | : | பெரியசாமி |
| ஊர் | : | நாரணமங்களம் |
| வட்டம் | : | ஆலத்தூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | பத்திரிக்கை நிருபர் |
| வயது | : | 38 |

**தேதி: 23.10.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பில் ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக:–**

1). 01.10.2022–ம் தேதியன்று நடைபெற்ற விபத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2). 28.09.2022–ம் தேதி முதல் 04.10.2022–ம் தேதி வரை நான் திருச்சிராப்பள்ளி ABC மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3). மேற்படி ABC மருத்துவமனையில் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட மருத்துவ கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 28 ) தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

4). 13.02.2024–ஆம் தேதி பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனை மருத்துவ குழுமத்தால் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

5). நான் தினத்தந்தி நிறுவனத்தில் பணிபுரிவதற்கான அடையாள அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

( மேற்படி ம.சா.ஆ.3 சான்றாவணம் 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**<u>2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

நான் டிப்ளமோ பிடெக் படித்துள்ளேன். எனது அடையாள அட்டையை தவிர நான் தினத்தந்தி நிறுவனத்தில் பணிபுரிவதற்குண்டான வேறு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டும் நான் தினத்தந்தி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எனது பணியை உதவியாளர் வைத்து செய்து வருகிறேன். எனது வருமானத்தை நிரூபிக்கும்விதமான ஆவணத்தை நான்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் விபத்திற்கு பின்னிட்டும் எனது பணியை செய்து வருகிறேன் என்றும் அதனால் எனக்கு எவ்வித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்பதாலும் எனக்கு வருமான இழப்பீடு எதுவும் கிடைக்கத்தக்கது இல்லை

என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் பூரண குணமடைந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்பதால்தான் நான் முன்னர் பார்த்த வேலையை தொடர்ந்து செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான்தான் என்னுடைய இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வட்டார போக்குவரத்து ஆய்வாளரால் எனது இருசக்கர வாகனம் ஆய்வுக்குட்பட்டது. நான் அபராதம் எதுவும் செலுத்தவில்லை. விபத்து நடைபெற்றவுடன் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று கொண்டேன். அதற்குண்டான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையத்தை நோக்கி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றேன். நான் எனது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்துதான் நீதிமன்றத்திற்கு வந்தேன். 1–ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் நான் சென்ற சாலையின் எதிர்ப்புறத்தில் உள்ள சாலையில் வந்து வலதுபக்கமாக திரும்ப முயற்சித்த போது விபத்து நடைபெற்றது. 1–ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தை நான் பார்க்கவில்லை. நான்தான் எனது இருசக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் எனது வாகனத்தின் முன்பகுதியும் 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பின்பகுதியும் சேதம் அடைந்துவிட்ட விபரம் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் தெரிய வரும் என்பதால்தான் மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் எனக்கு வலதுபக்க கண், வலது கை, வலது பக்க தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நான் தலைகவசம் அணிந்து வாகனத்தை ஓட்டவில்லை என்றும் அவ்வாறு தலைகவசம் அணிந்து இருந்தால்

எனக்கு தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் முழுமையாக குணமடைந்துவிட்டதால்தான் ABC மருத்துவமனையிலிருந்து என்னை விடுவித்தனர் என்று சொன்னால் சரியல்ல. நான் 04.10.2022 ற்கு பின்னர் எவ்வித சிகிச்சையும் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள்சாதாரண காயங்கள் என்றும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்பதாலும் எனக்கு விபத்து காயங்களால் எவ்வித அசௌகரியமும் ஏற்படவில்லை என்பதாலும் நான் கோரும் இழப்பீட்டு தொகை எனக்கு கிடைக்கத்தக்கது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஊனச்சான்று என்னால் தனிப்பட்ட முறையில் மாற்றுத்திறனாளி துறையில் வழங்கும் வசதிகளை பெறுவதற்காக பெறப்பட்டது என்றாலும் அதில் அதிகப்படியான ஊனம் குறிப்பிட்டு வாங்கினேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால்தான் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**